திரு. கே. விநாயகம் : கடல் பாசியை நிலத்திற்குத் தகுந்தாற்போல் உரமாக மாற்றமுடியவில்லையென்றாலும் முன்பொரு முறை முதல் அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது கடல் பாசியைக் கொண்டு அல்வா செய்து விற்று பணம் எடுக்க முடியும் என்று சொன்னதாக நினைவு. அப்போது நானும், நீங்களும் கூட இருந்தீர்கள். அந்த முயற்சியை இப்போது எடுத்துக்கொள்ள முடியுமா, இது பயன்படவில்லையென்றால்?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது நிலம் பற்றியது. அங்கத்தினர் அவர்களுக்கு அல்வா செய்து சாப்பிட விருப்பம் இருந்தால் வீட்டில் முயற்சி செய்து பார்க்கலாம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : விவசாயத்திற்கு ஃபிஷ் மீல், மீன் உரம் கிடைப்பது மிகவும் கடினமாயிருக்கிறது. அதை விவசாயிகளுக்கு நல்ல முறையில் நிரம்பக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : செய்யப்பட்டுத்தான் வருகிறது.

திரு. மு. ச. சிவசாமி : ப்ரேஸீலியா என்ற கடல்பாசியிலிருந்து அகரகர் என்ற பொருளிலிருந்து அல்வா தயார் செய்யமுடியுமென்பதை தமிழக அரசு அறிந்து தூத்துக்குடியில் அதற்கான ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருப்பது தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஜெல்லிதான் தயாரிக்கப்படுகிறது.

Publications Officer

*133 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Harijan Welfare and information be pleased to state—

(*a*) whether the post of Publications Officer has been abolished; and

(*b*) if so, the reasons therefor ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : ஜில்லாக்களில் மக்களுக்கு அரசாங்கச் சாதனைகளை விளம்பரம் செய்வது தேவையில்லை என்ற காரணத்தால் இந்த அதிகாரி நிறுத்தப்பட்டாரா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஏற்கனவே வெளியீட்டு அலுவலராக இருந்த ஒருவர் 1967-ம் வருடம் டிசம்பர் மாதம் 8-ம் தேதி 55 வயது பூர்த்தியானதால் மேற்படி பதவியிலிருந்து அவர் ஓய்வு பெற்றார். இப்போது அரசாங்க வெளியீடுகள் ஒன்றும் பிரசுரிக்காத காரணத்தினால் அந்தப் பதவி காலியாக வைக்கப்பட்டிருக்கிறதே தவிர அதை நிரந்தரமாக எடுத்து விடவில்லை.

அனந்தபுரத்தில் பத்திரப்பதிவாளர் அலுவலகம்.

*134 வினா.—**திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு சட்ட—கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி வட்டத்தில் உள்ள அனந்தபுரம் என்ற ஊரில் ஒரு பத்திரப் பதிவாளர் அலுவலகம் திறக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.